**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 28.10.2025

**அசல் வழக்கு எண்.4/2020**

**வா.சா.1 – மாணிக்கவேல், த/பெ.பழனி**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கு எதற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் வாடகை பாக்கிக்காக தாக்கல் செய்தேன். உங்கள் சங்கம் ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் என்றால் சரிதான். தாவா சொத்தின் நீளம் அகலம் தெரியுமா என்றால் சரியாக தெரியாது. தோராயமாக தெரியுமா என்றால் 10 அடிக்கு 25 அடி ஆகும். கடந்த 28.01.2014 சங்கத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியதாக சொல்கிறீர்கள் அந்த தீர்மானம் வழக்கில் தாக்கல் செய்தீர்களா என்றால் தெரியாது. சங்கத்திற்கு வரி விலக்கு உண்டு என்றால் சரிதான். மாதாமாதம் வாடகை கட்டும் பொழுது ஜிஎஸ்டி வரி சேர்த்து தான் வசூல் செய்கிறீர்கள் என்றால் சரிதான். வாடகை ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். நீங்கள் அவ்வாறு ஒரு ஒப்பந்தமே போடவில்லை வழக்கிற்காக ஒப்பந்தம் போட்டதாக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. கடந்த 30.09.2014, 04.12.2015, 09.12.2015 ஆகிய தேதிகளில் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்ததாக சொல்கிறீர்கள் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தெரியாது. கட்டிடத்திற்கு கழிவறை இல்லை என்றால் இருக்கிறது. அவ்வாறு கழிவறை இல்லை என்று சொன்னால் சரியில்லை. ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் சொன்னீர்கள் என்றால் சரிதான். அது என்ன எழுத்துப்பூர்வமான ஒப்பந்தமா என்றால் எழுத்தப்பூர்வமானது தான். அந்த ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாடகை உயர்த்தி அந்த தகவல் பிரதிவாதிக்கு எப்படி தெரிவித்தீர்கள் என்றால் அலுவலர் உதவியாளர் மூலமாக தெரிவித்தேன். அவருடைய பெயர் குறிப்பிட்டு சொன்னீரகளென்றால் தெரியாது. நீங்கள் தாக்கல் செய்த வாடகை ரசீது எந்த மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சொச்சமாக கொடுத்ததால் கொடுத்தவரை வாங்கிக் கொண்டும். அவர் இது நாள் வரை வாடகையை ஒழுங்காக செலுத்தி

வருகிறார் என்றால் சரியில்லை. அவ்வாறு செலுத்தாமல் இருந்தால் ரசீதில் சொல்லி இருப்பீர்கள் என்றால் சரியில்லை. 2014 ஆம் ஆண்டு ஒரு தீர்மானம் போட்டதாக சொல்கிறீர்கள் அதன் நகல் பிரதிவாதிக்கு கொடுத்தீர்களா என்றால் தெரியாது. அவ்வாறு ஒரு தீர்மானம் போடவில்லை என்றால் சரியில்லை. அவ்வாறு தீர்மானம் போட்டதாக வழக்குக்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. பிரதிவாதி மாதம்தோறும் 5ஆம் தேதி வாடகை செலுத்தி விடுவார் என்றால் சரியில்லை. வழக்கு காலதாமதத்தால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியில்லை. பரிகாரம் வழங்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.